# துவாக்குடி நகராட்சி

| மன்ற கூட்ட நாள் | தீர்மான எண் | பொருள் | அலுவலகக்குறிப்பு |
|---|---|---|---|
| 2020–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31–ம் தேதி திங்கள் கிழமை மதியம் 03.00 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க சாதாரணக் கூட்டம் நடைபெறும். | | | |
| | 521 | **பொருள் எண் 521**<br>துவாக்குடி நகராட்சிப்பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை அபிவிருத்தி திட்டம் (TURIP) 2020–2021–ம் ஆண்டு நிதியின் கீழ் வார்டு எண்.5,6,7,8,15–ல் தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள 21.08.2020 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அதற்கான தொழில்நுட்ப தகுதி உறை (Technical Bid) –ஐ கூர்ந்தாய்வு செய்ததில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் சரியாக உள்ள நிலையில் 24.08.2020 (Price Bid) அன்று விலை உறை திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | ஒப்பந்தாரர் பெயர் | சிப்பம்–1 தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | மதிப்பீட்டின் படி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம். பொன்னுசாமி, எண்.43, IAS நகர், திருவெறும்பூர், திருச்சி | 1,32,28,825.75 | 1,38,93,965.25 | 5.00 % கூடுதல் |
| 2 | திரு.கே.ஜெயராமன்,7ஏ,பாஸ்ட் ஆபிஸ்தெரு, மே.க.கோட்டை, திருச்சி | | 1,40,45,165.00 | 6.17 % கூடுதல் |

| வ.எண் | ஒப்பந்தாரர் பெயர் | சிப்பம்–2 தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாயில் | மதிப்பீட்டின் படி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம். பொன்னுசாமி, எண்.43, IAS நகர், திருவெறும்பூர், திருச்சி | 1,19,88,574.10 | 1,25,81,460.75 | 4.95 % கூடுதல் |
| 2 | திரு.கே. ஜெயராமன், 7ஏ,பாஸ்ட் ஆபிஸ் தெரு, மே.க.கோட்டை, திருச்சி | | 1,27,71,048.00 | 6.53 % கூடுதல் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் விலைகுறைப்பு செய்து தருமாறு குறைவான ஒப்பந்த விகிதம் அளித்திருந்த ஒப்பந்ததாரர் திரு.எம். பொன்னுசாமி, என்பவரிடம் விலைக்குறைப்பு செய்து தர கோரப்பட்டதற்கிணங்க விலைக்குறைப்பு செய்தபின் ஒப்பந்தப்புள்ளி விவரம் கீழ்க்கண்டவாறாகும்.

| வ.எண் | ஒப்பந்தாரர் பெயர் | சிப்பம்–1 தொகை ரூ. | விலைக்குறைப்புக்கு முன் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | விலைக்குறைப்புக்கு பின் ஒப்பந்தப்புள்ளி தொகைரூபாயில் |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம். பொன்னுசாமி, எண்.43, IAS நகர், திருவெறும்பூர், திருச்சி | 1,32,28,825.75 | 1,38,93,965.25 (5.00 % மதிப்பீட்டை விட கூடுதல்) | 1,38,57,530.00 (4.75 % மதிப்பீட்டை விட கூடுதல்) |

| வ.எண் | ஒப்பந்தாரர் பெயர் | சிப்பம்–2 தொகை ரூ. | விலைக்குறைப்புக்கு முன் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | விலைக்குறைப்புக்கு பின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.எம். பொன்னுசாமி, எண்.43, IAS நகர், திருவெறும்பூர், திருச்சி | 1,19,88,574.10 | 1,25,81,460.75 (4.95 % மதிப்பீட்டை விட கூடுதல்) | 1,25,58,213.00 (4.75 % மதிப்பீட்டை விட கூடுதல்) |

மேற்காணும் ஒப்புநோக்கு பட்டியலின்படி விலை குறைப்பு செய்தபின் உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–** 1. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் திரு.எம். பொன்னுசாமி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு தொகையிலிருந்து 4.75 % கூடுதலாக கொடுத்துள்ளார். இக்கூடுதல் சுதவீதமானது அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்கு 5 %–க்குள் உள்ளதாலும், மேலும் இப்படி திட்டப்பணி என்பதாலும் மன்றம் அனுமதிக்கலாம்..

2.அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின் தொகையை விட கூடுதலாகும் தொகையை நகராட்சி பொதுநிதியில் ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்–**589/2020/இ1

**பொருள் எண் 522**

522

துவாக்குடி நகராட்சியில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு ஏற்கனவே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண் பி3/25580/2015, நாள் 03.03.2016 தேதிய செயல்முறை உத்திரவின் படி தனியார் மூலம் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகர்மன்ற தீர்மான எண் 90 நாள் 18.09.2017 ன் படி M/S. SARAM ENVIRO SERVICE PVT.LIT., ஒப்பந்தம் அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வருட வாரியாக மூன்று ஆண்டு ஒப்பந்தக்காலம் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் காலநீட்டிப்பு அடிப்படையில் எச்1 மேலும் ஆறுமாத காலத்திற்கு பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எதிர் வரும் 31.08.2020–ம் தேதியோடு மேற்படி ஒப்பந்த காலம் முடிவடைகிறது. அரசாணை எண் 101 ந.நி.கு.வ.துறை 30.04.1997–ன் படி கூடுதல் துப்புரவு பணியாளர்களை அமர்த்திக்கொள்வதற்கு அனுமதி கோரி கடந்த 31.05,2019ம் தேதி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர், அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களுக்கு கருத்துரு மேலனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

இந்நிலையில், பொது மக்களின் நலன்கருதி, பொது சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடர்ந்து திறம்பட செயல்முறைபடுத்திட ஏதுவாக, தற்சமயம் துப்புரவு பணியை மேற்கொண்டு வரும் M/S. SARAM ENVIRO SERVICE PVT.LIT., என்ற நிறுவனத்தின் மூலம் மேலும், ஆறு மாத காலத்திற்கு துப்புரவு பணியிணை தொடர மேற்படி நிறுவனத்தின் எழுத்து பூர்வமான சம்மதத்தினை தெரிவிக்குமாறு இவ்வலுவலக கடிதம் நாள் 24.08.2020–ன் படி கோரப்பட்டது.

M/S. SARAM ENVIRO SERVICE PVT.LIT., மேலும் ஆறுமாத காலத்திற்கு ஏற்கனவே உள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் பணியினை தொடர சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி துப்புரவு பணியினை 01/09/2020 முதல் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.70,000/– ஆகும். மேலும், உத்தேச செலவினத்திற்கும், அவசர அவசியம் கருதி 01.09.2020 முதல் ஆறுமாத காலத்திற்கு M/S.SARAM ENVIRO SERVICE PVT.LIT., சென்னை பணியாளர்களை கொண்டு 01.09.2020 முதல் பணி மேற்கொள்ளுவதற்கு உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஒப்புதல் கிடைக்கும் பட்சத்தில் மறு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஒப்படைக்கும் வரை இதில் எது முந்திய அதுவரை மேற்படி நிறுவனம் துப்புரவு பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண் 523**

523

துவாக்குடி நகராட்சியின் பொது நிதி (குடிநீர் நிதி) 2020–21 –ன் கீழ் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 31.07.2020–ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | துவாக்குடி நகராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ளுதல் மற்றும் ஒப்பந்த பணியாளர்களை கொண்டு வால்வுகள் இயக்குதல் | 9.20 | எம்.ஜீவானந்தம்<br><br>எஸ்.ஏ. அரசு | மதிப்பீட்டை 0.14% குறைவு<br><br>மதிப்பீட்டை 0.70% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**– 1.குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள எம்.ஜீவானந்தம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

2.மேற்படி பணி குடிநீர் பணி என்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

524

**பொருள் எண் 524**

துவாக்குடி நகராட்சி பகுதியில் வார்டு எண்.2 மற்றும் 3 பகுதியில் உள்ள தேரடித் தெரு, நடுத் தெரு மற்றும் மேலத் தெருக்களில் உள்ள வீட்டில் பயன்படுத்தும் கழிவுநீர் மற்றும் மழைநீர் நகராட்சி எல்லையில் உள்ள குளத்தில் கலந்து களத்தில் உள்ள நீர் துர்நாற்றம் வீசுகிறது என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி இடத்தை தள ஆய்வுசெய்ததில் மேலத் தெரு பழைய மேல் நிலை நீர்தேக்கத் தொட்டி அருகில் உள்ள தெருவில் இருந்து தேரடி தெரு பாலம் வரை வடிகால் கட்டுவதற்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.33.00 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கும் வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டது

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | துவாக்குடி நகராட்சி வார்டு எண்.3 மேலத் தெரு முதல் தேரடி வரை வடிகால் கட்டுதல் | 33.00 |

**அலுவலகக்குறிப்பு**– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**–529/2020/இ1

525

**பொருள் எண் 525**

துவாக்குடி நகராட்சி பொது நிதியில் 2020–21–ம் ஆண்டிற்கு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 28.02.202தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | துவாக்குடி நகராட்சி வார்டு எண்.08 வ.ஊ.சி நகர் 2வது சாலை மேற்கு வகுதியில் மழைநீர் வடிகாலுடன் சிறு பாலம் கட்டுதல் | 9.00 | எஸ்.சுமதி<br><br>ஆர். சிவக்குமார் | மதிப்பீட்டை 0.09% குறைவு<br>மதிப்பீட்டை 0.25% அதிகம் |
| 2 | துவாக்குடி நகராட்சி வார்டு எண்.11 வாய்க்கால்மேடு பகுதியில் மழைநீர் வடிகாலுடன் சிறு பாலம் கட்டுதல் | 5.00 | எம். பொன்னுசாமி<br><br>ஆர். சிவக்குமார் | மதிப்பீட்டை 0.10% குறைவு<br>மதிப்பீட்டை 0.50% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**– ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்**–451/2020/இ1

526

**பொருள் எண் 526**

துவாக்குடி நகராட்சி பகுதிகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களை (DBC)அமர்த்தி கொள்ளவதற்கு துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், திருச்சிராப்பள்ளி, அவர்கள் ந.க.எண். அ3/4417/2019 நாள் 23/05/2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,தஞ்சாவூர், அவர்களின் அ3/1256/2020 நாள் 10/07/2020 நாளிட்ட கடிதத்தில் 50 வீடுகளுக்கு 1 நபர் என்ற விகிதாச்சரத்தின் படி 28 DBC பணியாளர்கள் (ஆகஸ்டு 2020 முதல் டிசம்பர் 2020 ஐந்து மாதங்கள்) வரை அமர்த்தி டெங்க கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்ளவதற்கு நகர் மன்றம் தீர்மான எண். 514 நாள் 15/07/2020–ல் செலவினத்திற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதன்படி பணியாளர்களை கொண்டு பணி அமர்த்துவதற்கு 31/07/2020 தேதியில் கீழ்கண்டுள்ள மூன்று மகளிர் சுய உதவிக்குழுக்கள் விலை புள்ளி அளித்துள்ளனர்.

| வ.எண் | மகளிர் சுய உதவிக்குழு பெயர் | விலைப்புள்ளி விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | ஓம் மகளிர் சுய உதவிக் குழு எம்.டி.சாலை ,703, குவாரி, துவாக்குடி. | ஒரு நபர் நாள் ஒன்றுக்கு | 420/– |
| 2 | துளசி மகளிர் சுய உதவிக் குழு அண்ணாநகர், எம்.டி.சாலை, துவாக்குடி | ஒரு நபர் நாள் ஒன்றுக்கு | 440/– |
| 3 | ஓம் சக்தி மகளிர் சுய உதவிக் குழு அண்ணா நகர், எம்.டி.சாலை,துவாக்குடி | ஒரு நபர் நாள் ஒன்றுக்கு | 440/– |

இம்மூன்று விலைப்புள்ளிகளில் ஓம் மகளிர் சுய உதவிக் குழு துவாக்குடி என்ற குழு ஒரு நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.420/– அளித்துள்ளனர். அது மிகவும் குறைவான விலைப்புள்ளியாகும். மேற்படி மகளிர் குழு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி விகிதத்தை விடவும் குறைவாக உள்ளதால் அதனை ஏற்றுக்கொள்ளலாம். மேற்படி நிறுவனம் பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**– மன்றம் அனுமதி வழங்கலாம்.

அனுமதிக்கப்பட்டது

**ந.க.எண்**–எச்1/738/2020

527

**பொருள் எண் 527**

துவாக்குடி நகராட்சி வார்டு எண்.8ல் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட சமுதாய கூடம் தற்போது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுபிக்கப்பட்டுள்ளது.

மேலும், இச்சமுதாயக் கூடமானது அருகில் உள்ள மிகவும் ஏழ்மையான குடிசைப்பகுதி மக்களின் சொந்த குடும்ப சுப மற்றும் விஷேச நிகழ்வுக்காக பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.

தற்சமயம் சமுதாயக் கூடம் அமைந்துள்ள பகுதியினை சுற்றியுள்ள குடிசைப்பகுதியில் சுமார் 800 ஏழை குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். இந்நிலையில் இக்குடும்பங்களை சார்ந்தோர் தங்கள் வீட்டு சுப மற்றும் விஷேச நிகழ்வுக்களுக்காக பிற தனியார் திருமண மண்டபத்தில் பெரிய தொகை செலுத்த வசதியில்லாத காரணத்தினால் இச்சமுதாய கூடத்தை குடும்ப விஷேச நிகழ்வுகளுக்கு மீண்டும் பயன்படுத்திக்கொள்ள ஆணையருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, அப்பகுதி குடிசைப்பகுதி மக்களின் கோரிக்கையின் பேரில் ஒரு நாள் நிகழ்விற்கான சமுதாயக்கூட பராமரிப்பு கட்டணமாக கீழ்காணும் விவரப்படி தொகை நிர்ணயம் செய்து அனுமதி வழங்கலாம்.

1. கட்டிட பராமரிப்பு செலவு – ரூ.2500/–
2. மின்சார கட்டணம் – ரூ.1000/–
3. தண்ணீர் கட்டணம் – ரூ. 500/–
4. திடக்கழிவு அப்புறப்படுத்துதல் மற்றும் சுத்தம் செய்தல் – ரூ.1000/–

---------

ஆக மொத்தம் – ரூ.5000/– நாளொன்றுக்கு

---------

மேற்காணும் கட்டணத்தை குடும்ப விஷேச நிகழ்வுக்காக அப்பகுதி மக்களின் ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு இலாப

அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | 528 | நோக்கமின்றி பராமரிப்பு கட்டணமாக நாளொன்றுக்கு ரூ.5000/– நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பயன்படுத்தி கொள்ள மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**– மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்–**952/E1/2020<br>**பொருள் எண் 528**<br>துவாக்குடி நகராட்சி வார்டு எண்.15ல் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட சமுதாய கூடம் தற்போது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது.<br>மேலும், இச்சமுதாயக் கூடமானது அருகில் உள்ள மிகவும் ஏழ்மையான குடிசைப்பகுதி மக்களின் சொந்த குடும்ப சுப மற்றும் விஷேச நிகழ்வுக்காக பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது.<br>தற்சமயம் சமுதாயக் கூடம் அமைந்துள்ள பகுதியினை சுற்றியுள்ள குடிசைப்பகுதியில் சுமார் 800 ஏழை குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றனர். இந்நிலையில் இக்குடும்பங்களை சார்ந்தோர் தங்கள் வீட்டு சுப மற்றும் விஷேச நிகழ்வுக்களுக்காக பிற தனியார் திருமண மண்டபத்தில் பெரிய தொகை செலுத்த வசதியில்லாத காரணத்தினால் இச்சமுதாய கூடத்தை குடும்ப விஷேச நிகழ்வுகளுக்கு மீண்டும் பயன்படுத்திக்கொள்ள ஆணையருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.<br>எனவே, அப்பகுதி குடிசைப்பகுதி மக்களின் கோரிக்கையின் பேரில் ஒரு நாள் நிகழ்விற்கான சமுதாயக்கூட பராமரிப்பு கட்டணமாக கீழ்காணும் விவரப்படி தொகை நிர்ணயம் செய்து அனுமதி வழங்கலாம்.<br>1. கட்டிட பராமரிப்பு செலவு – ரூ.2500/–<br>2. மின்சார கட்டணம் – ரூ.1000/–<br>3. தண்ணீர் கட்டணம் – ரூ. 500/–<br>4. திடக்கழிவு அப்புறப்படுத்துதல் மற்றும் சுத்தம் செய்தல் – ரூ.1000/–<br>––––––––––<br>ஆக மொத்தம் – ரூ.5000/– நாளொன்றுக்கு<br>––––––––––<br>மேற்காணும் கட்டணத்தை குடும்ப விஷேச நிகழ்வுக்காக அப்பகுதி மக்களின் ஏழ்மை நிலையை கருத்தில் கொண்டு இலாப நோக்கமின்றி பராமரிப்பு கட்டணமாக நாளொன்றுக்கு ரூ.5000/– நகராட்சி கருவூலத்தில் செலுத்தி பயன்படுத்தி கொள்ள மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**– மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்–**952/E1/2020 | அனுமதிக்கப்பட்டது |

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி